விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 227 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 17 வெள்ளிக்கிழமை (02.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= வைப்பு

# நெடுந்தீவு கடற்பரப்பில் தமிழக மீனவர் உயிரிழப்பு

## அத்துமீறிய கடற்றொழிலாளர்களை கடற்படை கைது செய்ய முற்பட்டவேளை விபரீதம்



(யாழ்ப்பாணம்)
நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்ய முற்பட்டபோது ஏற்பட்ட விபத்தில் தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## பொலிஸ்மா அதிபரை நியமியுங்கள் ரணிலிடம் பஃவ்ரல்

(கொழும்பு)
பொலிஸ்மா அதிபர் குறித்து ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வர வேண்டும் 02

## 20 இந்திய மீனவர்கள் விடுவிப்பு

(கொழும்பு)
இலங்கையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 இந்திய மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.
இலங்கைக்கான 15

## பிரதமர் தினேஸ் ரணிலுக்கு ஆதரவு

(கொழும்பு)
பிரதமர் தினேஸ் குணவர்த்தனவின் மாஜன எக்சத் பெரமுன கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் 15

## நெடுந்தீவில் தமிழக மீனவர் உயிரிழப்பு இராமேஸ்வரத்தில் முற்றுகைப் போராட்டம்

### இலங்கைத் தூதுவரை நேரில் அழைத்து மத்திய அரசு கண்டனம்

(சென்னை)
நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர் ஒருவர் உயிரிழந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இராமேஸ்வரத் துறைமுகத்தை முற்றுகையிட்டு தமிழக மீனவர்கள் பாரிய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
மேலும் குறித்த சம்பவத்துக்கு இந்தியாவுக்கான இலங்கைத் தூதரை அழைத்து மத்திய அரசு தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.
இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
அத்துடன் இலங்கையில் உள்ள 15

## தமிழ்ப் பொது வேட்பாளர் தோல்வியின் பின் அரசியல் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்த முடியாத நிலையேற்படும் - சுமந்திரன்

(யாழ்ப்பாணம்)
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் தோல்வியடைந்ததன் பின்னர், ஆட்சிபீடமேறும் பெரும்பான்மையின ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் தமிழர்களுக்கான தீர்வு குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாத நிலையும் ஏற்படும் என விசனம் வெளியிட்டுள்ளார்.
சுமந்திரன் எம்.பி ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்ட 15



## தமிழ்ப் பொது வேட்பாளர் அடுத்த வாரம் அறிவிப்பு விக்னேஸ்வரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)
தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில், அடுத்த வாரம் அறிவிப்புக்கள் வெளியாகும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமிழ்ப்பொதுவேட்பாளர் தொடர்பில் 15

## ஈச்சமோட்டையில் மயங்கி விழுந்தவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
ஈச்சமோட்டை கடற்கரை வீதியால் சென்று கொண்டிருந்தபோது மயங்கி விழுந்த நிலையில் 15

## வடமராட்சி கல்வி வலய ஊழியர் விபத்தில் மரணம்

(கரணவாய்)
வடமராட்சி கல்வி வலய ஊழியர் ஒருவர் வீதி விபத்தில் உயிரிழந்துள்ளார்.
வடமராட்சி கல்வி வலய ஊழியரான யோகலிங்கம் அருள்காந்தன் (வயது - 26) என்பவரே உயிரிழந்தவராவார். 15



## கட்சி தீர்மானித்தால் ரணிலை ஆதரிப்போம்

### மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிக்க தமது கட்சி தீர்மானிக்கும் பட்சத்தில் அதற்கு நான் ஆதரவு வழங்கு 15



நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு கடற்பரப்பில் பலியான மீனவரின் குடும்பத்திற்கு

## ரூ. 10 இலட்சம் இழப்பீடு – ஸ்டாலின்

(சென்னை)

நெடுந்தீவு கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் படகொன்று இலங்கை கடற்படையினரின் படகொன்றுடன் மோதியதில் உயிரிழந்த மீனவரின் குடும்பத்திற்கு 10 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் அறிக்கையொன்றின் மூலம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உயிரிழந்த மீனவரின் குடும்பத்திற்கு இரங்கலையும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்குமாறு தமிழக அரசு பலமுறை கடிதங்கள் மூலமாகவும், நேரிலும் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து உரிய தூதரக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் இன்னும் பல மீனவர்களை இழக்க நேரிடும் என்றும் தனது அறிக்கையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

# பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர்

## அடுத்த வாரம் அறிவிக்கப்படும்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிப்பு பிற்போடப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் அடுத்த வாரம் அறிவிக்கப்படுவார் என அக் கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டு சின்னத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரை நியமிக்க கட்சியின் அரசியல் குழு கடந்த திங்கட்கிழமை தீர்மானித்தது. இரண்டு நாட்களில் வேட்பாளர் அறிவிக்கப்படும் என அதன்போது அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுவின் அந்த தீர்மானத்தை அடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கவுள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அறிவித்துள்ளது.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் அடுத்தவாரம் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# சிக்கல்களை தவிர்த்துக்கொள்ள கட்டுப்பணத்தை விரைவில் செலுத்துங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழு

இறுதி தருணத்தில் ஏற்படும் சிக்கல்களை தவிர்த்துக் கொள்வதற்கு ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணத்தை விரைவில் செலுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிட்டுள்ள நிலையில் எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்துவதற்கு காலவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் 50,000 ரூபாவும், சுயாதீன வேட்பாளர் 75,000 ரூபாவும் கட்டுப்பணமாக செலுத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

# மூன்று வர்ணங்களில் ஒக்டோபர் முதல் புதிய கடவுச் சீட்டு

(கொழும்பு)

மூன்று வெவ்வேறு வர்ணங்களில் புதிய அம்சங்களுடன் கூடிய கடவுச் சீட்டுகளை வழங்கவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். சாதாரண, உத்தியோகபூர்வ மற்றும் இராஜதந்திரிகளுக்கானது என மூன்று வெவ்வேறு வர்ணங்களில் புதிய அம்சங்களுடன் அவை வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் புதிய கடவுச் சீட்டுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## நெடுந்தீவு...

இதில் மலைசாமி(வயது 59) என்ற மீனவர் உயிரிழந்தார்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் படகொன்றில் தமிழக மீனவர்கள் 4பேர் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டிருந்தனர்.

அதன் போது, கடலில் சுற்றுக்காவல் நடவடிக்கை யில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் நேற்றைய தினம் வியாழக்கிழமை அதிகாலை அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட கடற்தொழிலாளர்களை கைது செய்ய முற்பட்டுள்ளனர்.

அவ்வேளை கடற்தொழிலாளர்களின் படகு கடலில் கவிழ்ந்துள்ளது. அதில் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் காணாமல்போயுள்ளார். ஏனைய மூவரும் கடற்படையினரால் மீட்கப்பட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளை காணாமல்போன கடற்தொழிலாளரை தேடும் நடவடிக்கையிலும் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த ஜூன் மாதம் 24ஆம் திகதி இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக கடற்தொழிலாளர்களை கைது செய்ய முற்பட்ட வேளை இலங்கைக் கடற்படை வீரன் ஒருவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,60)

## பொலிஸ்மா...

என தெரிவித்துள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பஃவ்ரல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதாக நடைபெறுவதை உறுதி செய்து மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பஃவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொலிஸ் மா அதிபர் இல்லாதமையினால் தேர்தலை நடத்துவது பாதிக்கப்பட்டால் தேர்தலை நடத்தும் உங்களின் கடமையை நிறைவேற்றுவதற்காக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என்ற அடிப்படையில் உங்களுக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி பொலிஸ் மா அதிபரை நியமிக்க வேண்டும். அந்த வகையில் குறித்த கடமையைச் செய்வீர்கள் என நம்புகிறோம்.

அதேபோல் சுதந்திரமான - நீதியான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக் குழுவிற்கு உதவுமாறும் வேண்டுகோள் விடுக்கின்றோம் என குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சங்கரப்பிள்ளை சிவகுமார்

(முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கடற்றொழில் பரிசோதகர்(பதில்), அகில இலங்கை சமாதான நீதவான், மொழி பெயர்ப்பாளர் தமிழ் – சிங்களம், சிங்களம் – தமிழ், சிங்களப் போதனாசிரியர் – அரச கரும மொழிகள் திணைக்களம்)

மலர்வு 12.12.1971

உதிர்வு 14.08.2023

திதி : திரயோதசி அபர பட்சம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
அன்பின் உறைவிடமே
நெடுந்தூர வாழ்க்கைப் பயணம்
பாதி வழியில் விலகியது ஏனோ...
எம் கண்ணீர்த்துளிகளின் ஈரம்
இன்னும் காயவில்லை
ஆண்டு ஒன்று ஆன போதினும்
வாழும் காலம் வரை உம் நினைவுகளோடு
நாமும்....
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

– குடும்பத்தினர்

(C-0909)

## கண்ணீர்க் காணிக்கை

யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பிரதி அதிபர்,

### மார்க்கண்டு சிறிகாந்தன்



அவர்கள் 31.07.2024 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள அவரது குடும்பத்தவர்களிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி....

அன்னாரின் உடல் அஞ்சலிக்காக இன்று 02.08.2024 பிற்பகல் 3.00 மணியளவில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் வைக்கப்படும்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்.

(215)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கில் போர் மூண்டால் இலங்கைக்கு பாரிய நெருக்கடி!

## அரசியல் ஆய்வாளர் மொஹறான் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைவர் கொல்லப்பட்டதன் மூலம் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மோதல் சூழ்நிலை உருவானால் அது இலங்கைக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் என அரசியல் ஆய்வாளர் மொஹறான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.**

அரசியல் மற்றும் பதற்றம் நிலவும் நிலைமைக்கு மத்திய கிழக்கு பிராந்தியம் தள்ளப்பட்டால், அது இலங்கையையும் முழு உலகத்தையும் மிகவும் பாதிக்கும்.

ஈரான் பதிலடி கொடுத்தால் தீவிர போர் பதற்றமாக அது மாற்றமடையும். எனினும் இந்த சந்தர்ப்பத்தில் நிலைமை எப்படி மாறும் என கூற முடியாது.

போர் பதற்றம் தீவிரமடைந் தால் அது நிச்சயமாக இலங் கையை நேரடியாக பாதிக்கும். மத்திய கிழக்கு நாடுகளி லேயே 65 சதவீதமான எண் ணெய் வளம் உள்ளது.

போர் மூண்டால் மத்திய கிழக்கு நாடுகளை நம்பியி ருக்கும் உலக நாடுகள் எண் ணெயை மிகப்பெரிய தொகையை தயார்ப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படுத்தும்.

இந்தப் போரால் இலங்கையின் பொருளாதாரம், மக்களின் வாழ்வாதாரம் அரசியல் நிலைமை உள்ளிட்ட பல விடயங்களுக்கு நேரடி பாதிப்பு ஏற்படுவதனை தவிர்க்க முடி யாமல் போகும்.

மத்திய கிழக்கு பிராந் தியத்தில் மோதல்கள் அதி கரிக்கும் பட்சத்தில் உலகளா விய விநியோக வலையமைப்பு வீழ்ச்சியடையும் என வும் இலங்கையும் பாதிக்கப் படலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(நி-6)

# தேர்தல் சட்ட மீறல் 125 முறைப்பாடுகள்

(கொழும்பு)

தேர்தல் சட்டத்தை மீறியமை உள்ளிட்ட 125-இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

நியமனம் வழங்குதல், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் ஆகியன இதற்குள் அடங்குவதாக ஆணைக் குழுவின் முறைப்பாட்டு பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தேர்தல் காலப் பகுதியில் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள முறைப் பாடுகளில் பெரும்பாலானவை, அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றமை தொடர்பிலேயே கிடைக்கப் பெற்றுள்ளதாக பஃப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (நி-6)

# கட்டுப்பணம் செலுத்தினார் விஜேயதாச



(கொழும்பு)

தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான விஜேயதாச ராஜபக்ஷ நேற்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

இதேவேளை 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடை பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக மொத்தம் ஏழு வேட்பாளர்கள் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேற்று முன்தினம் தேர்தல் ஆணைக் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஜனாதிபதி ரணில்-குகதாசன் எம்.பி கொழும்பில் திடீர் சந்திப்பு



(கொழும்பு)

தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சண்முகம் குகதாசன் நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பின்போது, திரு கோணமலை மாவட்டத்தில் நிலவும் பல்வேறு தேவைகள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் ஜனா திபதியுடன் குகதாசன் எம்.பி. கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)


"பொன்னகவை காணும் தீபஜோதி"
கூவில்

தீபஜோதி சனசமூக நிலையத்தின்
50ஆவது ஆண்டு நிறைவு பொன்விழாவினை முன்னிட்டு
தீபஜோதி விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும்

**மாபெரும் விளையாட்டுப் போட்டியும் கலை பண்பாட்டு பெருவிழாவும்- 2024**

முதலாம் நாள் நிகழ்வு

கலை பண்பாட்டு பெருவிழாவும்
நிலைய கீத வெளியீட்டு விழாவும்

காலம்: 02.08.2024 வெள்ளிக்கிழமை
நேரம்: மாலை 4.00 மணி
இடம்: தீபஜோதி விளையாட்டுக் கழக மைதானம்



**தலைமை**
திரு. பொ. செல்வகிருஸ்ணன்
(தலைவர், தீபஜோதி சனசமூக நிலையம்)

**பிரதம விருந்தினர்**
திருமதி. சுகுணாளினி விஜயரட்ணம்
(மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
கலாபூசணம்
திரு. கே. ஆர். திருத்துவராஜா
திரு. இ. மண்டலேஸ்வர குருக்கள்
(பிரதம குரு, சொக்கன்கலட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், கூவில் கொட்டடி ஞானவைரவர் ஆலயம்)
திருமதி. ஜெயபாரதி கௌசிகன்
(ஆசிரியை, யா/ஹாட்லி கல்லூரி)
திரு. வெற்றிவேல் சிந்துஜன்
(இசையமைப்பாளர், பாடகர்)

**கௌரவ விருந்தினர்கள்**
திரு. சின்னத்தம்பி சிவலிங்கம்
(ஓய்வுநிலை கிராம அலுவலர்)
திரு. சின்னத்துரை யோகநாதன்
(ஓய்வுநிலை கிராம அலுவலர்)

**நிகழ்ச்சி நிரல்**
- ஆலய தரிசனம்- சொக்கன்கலட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம்
- பாரம்பரிய கிராமிய நிகழ்வுகளுடன் நடைபவனி
- விருந்தினர்களை வரவேற்றல்
- நிலைய மைதான புதிய பிரதான நுழைவாயில் திறந்து வைத்தல்
- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- ஆசியுரை
- சம்பிரதாய பூர்வமாக 50 பானை பொங்கல் வைபவத்தினை -ஆரம்பித்து வைத்தல்
- வரவேற்புரை
- தலைமையுரை
- நிலைய கீதம் இசை வெளியீடு
- தீபஜோதி விளையாட்டுக்கழக வீரர்களின் சிலம்ப விளையாட்டுக்கள்
- தீபஜோதி கல்விக்கழக மாணவர்களின் கலை நிகழ்வுகள்
- விருந்தினர்கள் உரை
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தீபஜோதி சனசமூக நிலையம்,
தீபஜோதி விளையாட்டுக் கழகம்,
தீபஜோதி முத்தமிழ் கலாமன்றம்,
தீபஜோதி கல்விக் கழகம்.
(சி-902)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## யாழ். பல்கலையில் ஆரம்பமான 9 ஆவது உலக தமிழ் பூப்பந்தாட்ட போட்டி



ஒன்பதாவது உலக தமிழ் பூப்பந்தாட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக உள்ளக அரங்கில் ஆரம்பமானது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார்.

12 நாடுகளைச் சேர்ந்த 514 வீர, வீராங்கனைகளின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமாகியுள்ள ஒன்பதாவது உலகத் தமிழ் பூப்பந்தாட்டத் தொடரின் இறுதி போட்டிகள் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளன.

33 பிரிவுகளின் கீழ் இந்த போட்டிகள் நடைபெறுவதுடன், சர்வதேச வீரர்களுக்கான பிரிவும் இம்முறை இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது நாவாந்துறை சென் மேரிஸ் அணி




குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் தமது வைரவிழா முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்திய கால்பந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம் தமது வைர விழா முன்னிட்டு வடமாகாணரீதியாக நடத்தப்பட்ட கால்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென் ஜேம்ஸ் பாடுமீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்மேரிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

பரபரப்பான இறுதி யாட்டத்தில் நாவாந்துறை சென் மேரிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதில் சிறந்த ஆட்ட நாயகனாக நாவாந்துறை சென்மேரிஸ் அணி வீரர் ஜோன் லோயஸ், சிறந்த கோல் காப்பாளராக மயிலங்காடு ஞான முருகன் அணி வீரர் கஜீபன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் கலந்து கொண்டிருந்தார். (நி-6-90)

## பெண்களுக்கான நீச்சல் போட்டியில் வல்வை மகளீர் ஆதிக்கம்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான நீச்சல் போட்டியில் வல்வை மகளிர் மகாவித்தியாலயம் முதலாமிடத்தை பெற்றுள்ளது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான நீச்சல் போட்டி கிளிநொச்சி நீச்சல் தடாகத்தில் நடைபெற்றது.

இதில் யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம் 11 தங்க பதக்கங்கள், 7 வெள்ளிப் பதக்கங்கள் 4 வெண்கல பதக்கங்கள் உட்பட 22 பதக்கங்களை கைப்பற்றி 63 புள்ளிகளைப் பெற்று பெண்கள் பிரிவில் முதலாமிடத்தையும் இணுவில் மத்திய கல்லூரி 59 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் யாழ். இந்து மகளிர் கல்லூரி 29 புள்ளிகளை பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றனர். (நி-6-90)

## மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் கரம் போட்டியில் சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கரம் போட்டியில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான கரம் போட்டி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் 17 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய அணி முதலாமி டத்தையும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை இரண்டாமி டத்தையும் வேலணை மத்திய கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பெற்றனர். (நி-6-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வு

❖ 11 டிப்பர்கள், 3 உழவு இயந்திரங்கள் பறிமுதல்
❖ 13 பேர் கைது



(தருமபுரம்)

அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பனங்கண்டி, முரசு மோட்டை, பரந்தன் ஆகிய பகுதிகளில் இருந்து அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றி பயணிப்பதாக கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக பனங்கண்டி பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 மூன்று உழவு இயந்திரங்களும் முரசு மோட்டை பரந்தன் பகுதியில் ஏ 35 பிரதான வீதியில் அனுமதிக்கப்படாத பகுதியில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 11 டிப்பர்களும் அதன் சாரதிகளும் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தடயப் பொருட்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6-316)

# பயன்தரும் மரங்களை சேதப்படுத்திய யானை



(தருமபுரம்)

தருமபுரம் மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த யானை பயன்தரும் மரங்களை சேதப்படுத்தியுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் நேற்று முன்தினம் புகுந்த காட்டு யானை ஒன்று வாழ்வாதாரத்திற்காக செய்கை மேற்கொள்ளப்பட்ட இருபதுக்கு மேற்பட்ட வாழை, சோளச் செய்கை மற்றும் பலன் தரக்கூடிய நிலையிலிருந்த பலா மரத்தின் பலாக் காய்கள், தென்னைகள் என்பவற்றை சேதமாக்கியுள்ளது.

அண்மையில் கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவின் கீழுள்ள சம்புகுளம் மற்றும் நாவல்நகர் பகுதியில் இரவு வேளை மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து மக்களை அச்சுறுத்தியுள்ளதுடன் பயன்தரும் மரங்களை சேதப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-316)

# அறநெறிப் பாடசாலைகளை வலுவூட்டும் செயலமர்வு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்ற கலாசாரப் பிரிவு உத்தியோகத்தர்களுடான கலாசார செயற்றிட்ட முன்னேற்றம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலகமும், கிளிநொச்சி தெற்கு வலயக்கல்வி அலுவலகமும் இணைந்து சைவாலயங்கள், அறநெறிப் பாடசாலைகளினை வலுவூட்டும் செயற்றிட்டத்தின் கீழ் குறித்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறிப்பாக சைவ ஆலயங்களின் ஒன்றியத்தினை வலுவூட்டுதல், அறநெறிப்பாடசாலை ஒன்றியத்தினை வலுவூட்டுதல், சைவ அமைப்புகளை ஒன்றிணைத்தல் முதலான விடயங்கள் ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), உதவி மாவட்ட அரசாங்க அதிபர், கிளிநொச்சி தெற்கு வலய சமய பாட ஆலோசகர், சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகத்தில் கடமையாற்றுகின்ற கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இந்து கலாசார உத்தியோகத்தர், கிறிஸ்தவ கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-6-315)

# கிளி. மத்திய கல்லூரியின் நுழைவாயிலுக்கு அடிக்கல் நாட்டல்

(அக்கராயன்)

நூற்றாண்டை அண்மித்துக் கொண்டிருக்கும் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அழகிய நுழைவாயில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கல்லூரி அதிபர் ச.பூலோக ராசா தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

நுழைவாயில் அமைப்பதற்கான நான்கு மில் லியன் ரூபாய் நிதியினை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஏற்பாடு செய்திருந்தார்.

இந் நிகழ்வில் முன்னாள் ஓய்வுநிலை அதிபர் சோதிநாதன் பிரதம விருந் தினராகவும் பழைய மாணவர்களான வைத்தியர் சிறிதர், கணக்காளர் நவிச் சந்திரன், பொறியியளாளர் கடம்பசீலன், ஆசிரிய ஆலோசகர் லோகேஸ்வ ரன் மற்றும் பழைய மாண வர்கள் உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-6-350)



கிளிநொச்சி தெற்கு வலய தமிழ் மொழி கலைத்திறன் போட்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இலக்கிய நாடகத்தில் கிளி/முக்கொம்பன் மகாவித்தியாலய மாணவர்கள் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளனர். (படம்: கிருஸ்ணகுமார்)

# இராசிபலன்

02.08.2024
ஆனி 17, வெள்ளிக்கிழமை
திரயோதசி பிற்பகல் 4.49 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 12.59 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சந்திராஷ்டமம் - சுவாதி, விசாகம்

வளவன்

**மேஷம்**
ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**கடகம்**
அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**துலாம்**
விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்**
கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**ரிஷபம்**
காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்**
அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**விருச்சிகம்**
கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், மனசஞ்சலங்கள் கூடும் நாள்.

**கும்பம்**
பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.

**மிதுனம்**
எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.

**கன்னி**
தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு**
அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மீனம்**
மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள் பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

எந்தப் பிரச்சினையையும் மென்மையாக அனுகுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் சாரதிகளுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை சிறுவர்களுக்கான சிறுவர் பாதுகாப்புத் தொடர்பாக போக்குவரத்து சேவை வழங்கும் வாகன உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கான விழிப்பு ணர்வுச் செயலமர்வானது யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் சிறுவர் துஷ்பிரயோகங்களை அடையாளம் காணுதல், சிறுவர்களுக்கான பாதுகாப்பான பயணம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடு கள் தொடர்பாக சாரதிகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட் டது.

இக் கலந்துரையாடலில் உதவி மாவட்டச் செயலாளர், உதவி ஆணையாளர் மோட்டார் போக்குவரத்து திணைக் களம், சட்ட வைத்திய அதிகாரி ஆதார வைத்தியசாலை பருத் தித்துறை, மாவட்டச் செயலக பெண்கள், சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் போக் குவரத்து சேவையில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் கலந்து கொண்டனர். (நி-6-33)

# கனிய மணல் அகழ்வாய்வு

## மக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்

(நெளுக்குளம்)

### முல்லை அளம்பில் கடற்கரையிலிருந்து தீர்த்த கரைவரையான கரையோர பகுதியில் கனிய மணல் அகழ்விற்கான முன்னாயத்த ஆய்வுப் பணி மக்கள் எதிர்ப்பால் தடுத்து நிறுத்தம்



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் கனிய வள மணல் அகழ்வதற்கான முன் னாயத்த கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

'இதையடுத்து இரகசிய மான முறையில் முல்லைத் தீவு அளம்பில் கடற்கரை யில் இருந்து தீர்த்தக் கரைவரை ஆய்வுப் பணி யினை மேற் கொள்ள திணைக்கள அதிகாரிகள் சென்றிருந்தனர்.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு சென்ற வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன், பொது மக்கள் ஒன்று திர ண்டு எதிர்ப்பினை தெரி வித்தனர்.இதனையடுத்து குறித்த ஆய்வுப்பணி கைவி டப்பட்டது.

குறித்த ஆய்வுப்பரிசோத னையை மேற்கொள்வதற் காக கடலோர பாதுகாப்புத் திணைக் களம் , கனிய மணல் திணைக் களம், வன ஜீவராசிகள் திணைக் களம் , சுற்றுச்சூழல் திணை க்களம், நீர் வள முகா மைத்துவத்தினர், புவிசரித வியல் திணைக்களம் இவர்களுடன் இணைந்து கரை துறைப் பற்று பிரதேச செயலக காணி உத்தி யோகத்தர் மற்றும் அப்பகுதி கிராம சேவையாளர், ஆகி யோர் இணைந்து ஆய்வு நடவடிக்கையை மேற் கொள் வதற்காக குறித்த இடத் திற்கு விஜயம் செய்தி ருந்தமை குறிப்பிடத்தக் கது. (நி-6-299)

## தீபஜோதி சனசமூக நிலையத்தின் பொன்விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு பொன்விழா வினை முன்னிட்டு தீபஜோதி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டியும் கலை பண்பாட்டு பெரு விழாவும் இன்று வெள்ளிக் கிழமை மாலை 4 மணிக்கு குறித்த விளையாட்டுக்கழக மைதானத்தில் நிலையத் தலைவர் பொ. செல்வகிருஷ்ணன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி. சுகுணாளினி விஜயரட்ணம் கலந்து கொள்ள வுள்ளார்.முதலாம் நாள் நிகழ்வுகளாக கலை பண்பாட்டு பெருவிழாவும், நிலைய கீத வெளியீடும் நடைபெறவுள்ளன. (நி-6)

## மாணவர்களுக்கான உதவித்திட்டம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் மக்கள் மன்றத்தின் இங்கிலாந்து கிளையின் நிதி அனுசரணையில் பாடசாலை மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணி தொடக்கம் 7 மணி வரை மல்லாகம் மக்கள் மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது யா/மல்லாகம் மகாவித்தியாலயம், யா/ தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம், யா/ குளமங்கால் றோ.க. வித்தியாலயம் மற்றும் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என மல்லாகம் மக்கள் மன்றத்தலைவர் அறிவித்துள்ளார். (நி-6)

### நல்லூர் ஆலய திருவிழா

## வீதித்தடை தொடர்பான கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவ கால ஏற்பாடுகள் தொடர்பாக வீதித்தடைக்குள் வதியும் பொது மக்களுடனான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது.

எனவே வீதித்தடைப் பகுதிக்குள் வதியும் பொது மக்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாநகர ஆணையாளர் ச.கிருஷ்னேந்திரன் அறிவித்துள்ளார். (நி-6)

## அனலைதீவு பிரதான வீதி புனரமைப்பு



(யாழ்ப்பாணம்)

பிரதான வீதி புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குறித்த வீதியின் புனரைப்பு அவசியம் குறித்து ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊர்காவற்றுறை நிர்வாகத்தினரிடம் குறித்த பகுதி மக்கள் கொண்டு வந்த நிலையில் அது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதையடுத்து அது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா துறைசார் தரப்பினரது கவனத்துக்கு கொண்டுசென்ற நிலையில் 24 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண, குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடின் கீழ் 1.7.கிலோ மீட்டர் வீதியின் புனரமைப்புக்கென 25மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது.

இந்நிலையில் நேற்று குறித்த வீதியின் புனரமைப்பு பணிகளின் ஆரம்ப நிகழ்வுகள் அமைச்சரின் சார்பில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவர் கந்தசாமி கமலேந்திரன் கட்சியின் ஊர்காவற்றுறை நிர்வாக பொறுப்பாளரும் முன்னாள் தவிசாளருமான மருதயி னார் ஜெயகந்தன் துறைசார் அதிகாரிகள் பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டு முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக் கது. (நி-6-33)

## பிற்போடப்பட்டது மத்தியஸ்தசபை அமர்வு

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த கரவெட்டி மத்தியஸ்த சபை அமர்வு ஆடி அமாவாசை காரணமாக அன்றைய தினம் நடைபெற மாட்டாது.

அதற்கு பதிலாக எதிர் வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வழமைபோல் நடை பெறும் என தவிசாளர் சி. நற்குண லிங்கம் அறிவித்துள்ளார். (நி-6)

## நெல்லியடி நகர்ப் பகுதியில் விபத்து-இருவர் காயம்

(கரணவாய்)

வீதியைக் கடக்க முற்பட்ட வேளை நபரொருவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்துக் குள்ளானதில் காயம் அடைந் துள்ளார். நெல்லியடி நகர்ப் பகுதியில் குறித்த விபத்து நேற்று காலை இடம்பெற்றது.

பொருட்களை வாகனத்தில் இருந்து கடைகளுக்கு கொண்டு சென்று கொடுத்துவிட்டு வீதியைக் கடக்க முற்பட்ட வேளை குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதில் கடக்க முற்பட்ட நபரும் மோட்டார் சைக்கிள் ஓடி வந்தவரும் காயங்களிற்கு உள்ளாகியுள்ளனர்.

காயமடைந்த இருவரும் மந்திகை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளை கொழும்பிற்கு அழைத்த ஆணைக்குழு

(கொழும்பு)

சகல மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளும் மாவட்ட பிரதி மற்றும் உதவி தேர்தல்கள் ஆணையாளர்களும் கொழும்பில் உள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நாளை சனிக்கிழமை அழைக்கப்பட்டுள்ளனர்.


ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக அவர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது இம் மாதம் 5 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. (நி-6)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

ஊரெழு கணேச வித்தியாசாலையின் அதிபர் கவிஞர்

திரு. இரா.ஜெயக்குமார்



மலேசியா நாட்டின் ஈப்போ நகரில் உள்ள முத்தமிழ்ப் பாவலர்மன்றத்தினால் 2024.07.21 ஆம் திகதி நடாத்தப்பட்ட உலகத் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் "முத்தமிழ்க் கோன்" எனும் பட்டமும் நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். தக்கார் விருது பெற்ற16 தமிழ் எழுத்தாளர்களில் இலங்கையர் இவர் ஒருவர் மட்டுமே. இவரது தமிழ்ப் பணிகளுக்காகவும் எமது ஊரெழு கணேசவித்தியாசாலைக்கு ஆற்றும் கல்விப் பணிக்காகவும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

[1599]

வாழ்த்துபவர்கள்: திரு திருமதி இரத்தினகுமார் நிரஞ்சனா குடும்பம் (பழைய மாணவர்கள் ஜேர்மனி)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு :1985 - இந்து
நட்சத் திரம்: திருவோணம்
கி.பா: 29
உயரம் : 188cm
தகைமை/தொழில்: HND Computer Science, Server Build Technician.
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14167

பிறப்பு:1995 -இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 34
உயரம் : 175cm
தகைமை/தொழில்- BSC, Software Engineer
எதிர்பார்ப்பு: அரச வேலை
தொ.இ: B/14175

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 59 3/4
உயரம் :5'10"
தகைமை/தொழில்: Bsc, Msc (P.H.I)
எதிர்பார்ப்பு: தொழில்
தொ.இ: B/14176

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1991 - இந்து
நட்சத் திரம்: மூலம்
கி.பா- 23 சூரி செவ் 12 இல்
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: BBA, MBA Management Assistant.
எதிர்பார்ப்பு: நிரந்தர வேலை(Gov/Pvt)
தொ.இ: G/14352

பிறப்பு-1994 -இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: - 38 1/2
உயரம் : 5'
தகைமை/ தொழில்: Bsc, Msc Scientific Officer.
எதிர்பார்ப் பு: வெளிநாடு
தொ.இ: G/14353

பிறப்பு -1988 -இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா:- 22 1/4
உயரம் : 5'6"
தகைமை/ தொழில்: Diploma in Teaching. Montersari
எதிர்பார்ப்பு: படித்த.குணமுள்ளவர் (விவாகரத்தானவர்)
தொ.இ: G/14354

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

**சந்தை, இறைச்சிக்கடைகளை 15.08.2024- 31.12.2024 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக் கேள்வி அறிவித்தல் - 2024**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட கீழ்வரும் விபரங்களைக் கொண்ட சந்தை, இறைச்சிக் கடைகளை 15.08.2024 - 31.12.2024 வரை குத்தகைக்கு வழங்குவதற்காக ஏலக் கேள்வி விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏலக் கேள்விகள் 20.10.2023 ஆம் திகதிய தினக்குரல், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்பட்டுள்ளது.

ஏலக்கேள்வி 09.08.2024 காலை 10.30 மணிக்கு நடைபெறும்.

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் கேள்வி வைப்புப் பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை 02.08.2024 தொடக்கம் 09.08.2024 வரையான காலப்பகுதியில் முற்பகல் 10.30 வரை பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கான ஏலக் கேள்வியில் கலந்து கொள்பவர்கள் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணத்தினை 09.08.2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்துவதுடன், சித்திர கேள்விக்காரர் உடனடியாக ஏலத்தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்பு பணத்தை செலுத்தி ஒப்பந்தம் செய்ய வேண்டும். பாதுகாப்பு வைப்புப் பணம் உடனடியாக செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகை வழங்கப்படும்.

| தொ .இல | குத்தகை விபரம் | 2024 ஆம் ஆண்டு ஏலக் கேள்வி தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் (1%) |
|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | |
| 1 | நெல்லியடி கோழி இறைச்சிக்கடை | 194,850.00 | 1,948.50 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | |
| 2 | அந்திரான் சந்தை | 107,500.00 | 1,075.00 |
| 3 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 619,000.00 | 6,190.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | |
| 4 | துன்னாலை வடக்கு சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 51,000.00 | 510.00 |

கணேசன் கம்ஸநாதன்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
(சி-905) 02.08.2024


## மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

திருமதி.தில்லைநாயகி தேவகுமார்(SLTS - 1)




சேவை விபரம்

- யா/வேலணை ஐயனார் வித்தி (1989.11.29-1993.03.02)
- யா/கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை (1993.03.03-1994.12.31)
- யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தி (1995.01.01-1995.10.30)
- கிளி/பாரதி வித்தி (1995.11.01-1997.04.17)
- வவ/தம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தி (1997.04.18-2001.05.14)
- கொ/புளுமெண்டல் தமிழ் வித்தி (2001.05.15-2004.01.25)
- யா/ஒஸ்மானியா கல்லூரி (2004.01.16-2013.12.31)
- யா/பெரியபுலம் ம.வி (2014.01.01-2024.08.04)

ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி 04.08.2024 இல் இருந்து ஓய்வு பெறும் மணிவிழா நாயகியை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

"தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்"

(1589)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இந்தியாவை புரட்டிப்போட்ட காலநிலை
# 281 பேர் இதுவரை உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவின் ஹிமாச்சல் பிரதேஷ் பகுதியிலுள்ள மண்டி - பதாரில் மேக வெடிப்பு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

பல்வேறு இயற்கை காரணிகளால், மேகம் ஒரே சமயத்தில் அதிகளவான நீரைக் கொட்டும் நிகழ்வு அவ்வப்போது இடம்பெறுவதுண்டு. அவ்வாறு இடம் பெற்ற இந்த சம்பவத்தில் ஒருவர் பலியானதுடன், 9 பேர் மாயமாகியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. மேக வெடிப்பு காரணமாக பல வீடுகளும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை இந்தியா, உத்தரகாண்ட், அரித்துவாரில் தொடர்ந்தும் கன மழை பெய்து வரும் நிலையில், பார்ப்பூர் என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் மாலை வீடு ஒன்று இடிந்து விழுந்துள்ளது.

இதில் பலர் மண்ணுக்குள் புதையுண்ட நிலையில் 3 பேர் உயிரிழந்துள்ளதோடு 6 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 277 ஆக உயர்ந்துள்ளதுடன், 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அத்துடன் சுமார் 200 பேர் காணாமல் போயுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலச்சரிவால் வயநாடு பகுதியில் உள்ள இரண்டு கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், இந்த நிலச்சரிவு குறித்து ஜுலை 23ஆம் திகதி முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பாரிஸ் ஒலிம்பிக்கில்
## ஆனந்த் அம்பானி-ராதிகா



(பாரிஸ்)

அண்மையில் திருமணம் செய்துகொண்ட ஆனந்த் அம்பானி மற்றும் ராதிகா மெர்ச்சன்ட் 2024 பாரிஸ் ஒலிம்பிக்கில் கலந்து கொண்டுள்ளனர்.

ரிலையன்ஸ் அறக்கட்டளையின் தலைவர் நீதா அம்பானி சர்வதேச ஒலிம்பிக் குழுவில் உறுப்பினராக உள்ளதால் அவரும் இதில் பங்கேற்றுள்ளார்.

அவர்களுடன் முகேஷ் அம்பானி, இஷா அம்பானி, ஆனந்த் பிரமால் ஆகியோரும் பங்கேற்றுள்ளனர்.

ஆனந்த் அம்பானி மற்றும் ராதிகா மெர்ச்சன்ட் திருமணத்திற்குப் பிறகு பொதுவெளியில் தோன்றுவது இதுவே முதல்முறை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் தற்போது பார்வையாளர்களை ஈர்த்துள்ள நிலையில் அம்பானி குடும்பத்தின் வருகை பலரது கவனத்தைப் பெற்றுள்ளது. (நி-6)

# விரைவில் பூமிக்குத் திரும்பவுள்ள சுனிதா

(வோஷிங்டன்)

விண்வெளியில் 52 நாட்களாக சிக்குண்டுள்ள சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இரண்டு விண்வெளி வீரர்களும் இம் மாதம் பூமிக்கு திரும்புவார்கள் என்று நாசா அறிவித்துள்ளது.



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனையான சுனிதா வில்லியம்ஸ் கடந்த ஜுன் 5 ஆம் திகதி புட்ச் வில்மோர் என்ற விண்வெளி வீரருடன் விண்வெளிக்கு சென்றிருந்தார்.

அமெரிக்காவின் கேப் கனாவெரல் ஏவுதளத்தில் இருந்து புறப்பட்டவர்கள் ஜுன் 7 ஆம் திகதி சர்வதேச விண்வெளி மையத்தை அடைந்தனர். இருவரும் விண்வெளி பயணத்தை முடித்துக்கொண்டு கடந்த 13 ஆம் திகதி பூமிக்கு திரும்பும் வகையில் பயண திட்டம் அமைக்கப்பட்டிருந்தது.

எனினும் பயணத்திட்டம் திடீரென 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்ட பின்னர் அந்த திகதியிலும் அவர்கள் பயணிக்கவிருந்த விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக அவர்கள் பூமிக்கு திரும்புவதில் பிரச்சினை ஏற்பட்டது.

இவ்வாறு 52 நாட்களுக்கும் மேலாக சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இரண்டு விண்வெளி வீரர்களும் சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்குண்டுள்ளமையால் அவர்கள் எப்போது பூமிக்கு திரும்புவார்கள் என்ற கேள்வி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இது குறித்து தற்போது கருத்து வெளியிட்டுள்ள நாசா, சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தோடு இயக்கப்பட்டு இருக்கும் போயிங் விண்கலத்தின் ப்ளைட் கன்ட்ரோலர் அடுத்தடுத்து சோதனை செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த சோதனை வெற்றி பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும் விண்வெளி வீரர்களான புட்ச் வில்மோர் மற்றும் சுனிதா வில்லியம்ஸ் ஆகியோர் சோதனையின் போது ஸ்டார்லைனர் கலிப்சோவிற்குள் அமர்ந்து தகவல்களை வழங்கியதாகவும் போயிங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

போயிங் விண்கலத்தில் ஹீலியம் கசிவு சரி செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் ஒகஸ்ட் மாதத்தில் எப்போது வேண்டுமானாலும் பூமிக்கு திரும்பலாம் எனவும் நாசா தெரிவித்துள்ளது. (நி-6)

## அதிக உணவு வழங்கியதால்
# உயிரிழந்த நாய்
### உரிமையாளருக்கு சிறை

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் அளவுக்கு அதிகமாக உணவு வழங்கியமையால் நாய் ஒன்று உயிரிழந்த சம்பவம் தொடர்பில் உரிமையாளரான பெண்ணுக்கு இரண்டு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நகி என்ற நாய் 53 கிலோகிராம் எடையும் கடுமையான உடல் பருமனும் கொண்டிருந்தது.

நாய்க்கு அவர் தினமும் சராசரியான உணவை விட 10 இறைச்சி துண்டுகளை அதிகம் கொடுத்து வந்ததனால் அந்நாய்க்கு உடல் எடை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், விலங்குகள் வன்கொடுமை தடுப்புச் சங்கம் அதை கண்டறிந்து அந்த நாயை மீட்டு வைத்திய சாலையில் சேர்த்தனர்.

2 மாத சிகிச்சையில் 8.8 கிலோ குறைந்த பின்னரும் கல்லீரல் இரத்த கசிவால் அந்த நாய் இறந்து போனது. அதற்கு அதீத உடல் எடையே காரணமாக கூறப்படுகிறது.


இதனால் மானுகா மாகாணத்தின் நீதிமன்றம் நாயின் உரிமையாளருக்கு 1,222 நியூசிலாந்து டொலர் அபராதமும் இரண்டு மாதங்கள் சிறை தண்டனையும் ஓராண்டு காலத்திற்கு நாய் வளர்க்கும் உரிமையையும் இரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

துரதிஷ்டவசமாக குறைந்த எடையுடைய பிராணிகளே அதிக இன்னல்களுக்கு ஆளாகும்.

ஆனால் அதற்கு நிகராக அதிக எடை கொண்ட பிராணிகளும் பல இன்னல்கள் சந்திக்க நேரிடுகிறது என விலங்குகள் வன்கொடுமை தடுப்புச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலை பழி வாங்குவோம்! ஈரான் ஜனாதிபதி சூளுரை



(டெஹ்ரான்)

**ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டமைக்கு பதிலடி கொடுக்கப்போவதாக ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஸ்கியன் தெரிவித்துள்ளார்.**




இந்த கோழைத்தனமான கொலை குறித்து இஸ்ரேல் கவலைப்படும் நிலையை ஏற்படுத்துவேன் என தெரிவித்துள்ள அவர் ஈரான் தனது ஆட்புல ஒருமைப்பாடு, கௌரவம் ஆகியவற்றை பாதுகாக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தலைவர் துணிச்சலானவர்.

அவருடைய கொலைக்கு பழிவாங்குவது ஈரானின் கடமை என ஈரானின் ஆன்மிகத் தலைவர் ஆயத்தொல்லா அலி கமேனியும் தெரிவித்துள்ளார். (நி-6)

## அதிகரிக்கும் பதற்றம் உடன் வெளியேற உத்தரவு



(லெபனான்)

இஸ்ரேலுக்கும்ஹிஸ்புல்லாவுக்கும் இடையே மோதல்கள் அதிகரிக்கும் அபாயம் உள்ளதால் லெபனானில் உள்ள தமது பிரஜைகளை உடன் வெளியேறுமாறு அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா நாடுகள் உத்தரவு பிறப்பித்துள்ளன.

லெபனான் தலைநகர் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் மூத்த தளபதி ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்த தாக்குதலை அடுத்து ஹிஸ்புல்லா இஸ்ரேல் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் அவுஸ்திரேலியர்கள் லெபனானில் இருந்து விரைவில் வெளியேற வேண்டும் என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அதேபோன்று அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவும் இதே கோரிக்கையை தங்கள் நாட்டு மக்களிடம் விடுத்துள்ளன.

இதேவேளை சுமார் 15,000 அவுஸ்திரேலியர்கள் லெபனானில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2021 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, லெபனான் வம்சாவளியைச் சேர்ந்த சுமார் 500,000 பேர் அவுஸ்திரேலியாவில் வசிப்பதாக தெரியவந்துள்ளது. (நி-6)

## ஹமாஸ் தலைவரின் ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு



(டெஹ்ரான்)

இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹமாஸ் தலைவரின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

ஹமாஸ்தலைவர் இஸ்மாயில் ஹனியேயின் உடலிற்கான பிரார்த்தனைகளிற்கு ஈரானின் ஆன்மிகத் தலைவர் ஆயதொல்லா அலி கமேனி தலைமை தாங்குகின்றார்.

ஹமாஸ் தலைவரின் உடல் கட்டார் தலைநகர் டோகாவிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு இறுதி நிகழ்வுகள் இடம்பெறும். (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சிபானை இம்ரான் கைது



(கொழும்பு)

பிரபல வர்த்தகரான கிளப் வசந்தவின் கொலையின் மூளையாக கருதப்படும் பாதாள உலகத் தலைவர் கஞ்சிபானை இம்ரான் மற்றும் பாதாள உலக உறுப்பினர் லொக்கு பெற்றி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரான்சில் தலைமறைவாகியிருந்த கஞ்சிபானை இம்ரான் பொலிஸில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் லொக்கு பெற்றி டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிளப் வசந்த என்றழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேராவின் கொலை பாதாள உலகக் குழுத் தலைவர் கஞ்சிபானை இம் ரானால் திட்டமிடப்பட்டிருந் தாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் டுபாயைச் சேர்ந்த பாதாள உலகக் குழு உறுப்பினர் லொக்கு பெற்றி என்பவரால் இந்த கொலை வழி நடத்தப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் பிரான்சில் பதுங்கியிருந்த கஞ்சிபானை இம்ரான், பிரான்ஸ் எல்லை வழியாக தப்பிச் செல்ல முயன்ற போது எல்லையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 250 | 200-250 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 200 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 500 | 400-450 | 500 |
| தக்காளி | 250 | 300 | 300 | 200-250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 160 | 150-200 | 200 |
| கோவா | 350 | 350 | 400 | 350 | 400 |
| கரட் | 300 | 450 | 450 | 400 | 450 |
| பூசணி | 180 | 160 | 200 | 150-200 | 200 |
| புடோல் | 160 | 160 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 200 | 200 | 250-300 | 150 |
| சின்ன வெங்காயம் | 380 | 450 | 350 | 250-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 800 | 600 | 600 | 450 | 600 |
| வெண்டக்காய் | 150 | 200 | 150 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 160 | 160 | 100 | 200 |
| பயற்றங்காய் | 200 | 220 | 200 | 150-200 | 200 |
| லீக்ஸ் | 450 | 500 | 450 | 300 | 500 |
| பீற்றூட் | 400 | 400 | 400 | 450 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 1200 | 400 | 1200 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 150 | 40-70 | 200 |
| போஞ்சி | 600 | 650 | 700 | 400 | 800 |
| கத்தரி தம்புள்ள | 200 | 140 | 250 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 40 | 50 | 80 |
| தேசிக்காய் | 600 | 700 | 600 | 500-600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 500 | 500 | 650 | -- | 700 |
| வெங்காயப்பூ | 400 | 120 | 400 | -- | 300 |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 80 | 60 |

## இன்று ஒரு தகவல் 201



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சினத்தின் பயன்

வைகுண்டத்திலே ஒரு நாள். இப்படி நான் ஆரம்பித்ததும்... உடனே நீங்கள் அங்கே போனீர்களா? வந்தீர்களா? என்று எல்லாம் கேட்கக் கூடாது! புராணக்கதைகள் எல்லாம் சில உண்மைகளையும் தத்துவங்களையும் விளக்குவதற்காக! அதனாலே அதை எல்லாம் கேட்பதோடு வைத்திருக்க வேண்டும். நேரிலே காட்டு என்று சொல்லி என்னை தேடிக் கொண்டு வரக்கூடாது.

சரி இப்ப கதைக்குப் போவோம். இராவண சம்ஹாரம் செய்வதாக மகாவிஷ்ணு தேவர்களுக்கு வாக்கு கொடுத்து விட்டார். எல்லோரையும் போல வாக்கு கொடுத்து விட்டு அதன் பின்பு அதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தார். அவருக்கு என்ன பிரச்சினை என்றால்? பூமியிலே வந்து மனிதனாகப் பிறக்க வேண்டுமே... அதற்கு என்ன செய்வது? இப்படி யோசித்து கொண்டே அதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் விஸ்வாமித்திரர் விஷ்ணுவைப் பார்ப்பதற்காக வைகுண்டத்திற்கு வந்து சேர்ந்தார். விசுவாமித்திரர் மிகவும் பெரியவர் இல்லையா? அதனாலே விஷ்ணுவும் இலட்சுமியும் எழுந்து நின்று அவருக்கு மரியாதை கொடுத்தார்கள். வருகின்ற விருந்தாளிகளுக்கு என்று ஒரு சிம்மாசனம் போட்டு வைத்திருந்தார்கள். அதைக் காட்டி அதிலே உட்காருங்கள் என்று சொன்னார்கள். விஸ்வாமித்திரர் அந்த சிம்மாசனத்திற்கு அருகே சென்று அதிலே உட்காரப் போனார். அந்த சமயத்திலே விஷ்ணு அவரைப் பார்த்து “பார்த்து உட்காருங்கள்” என்று சென்னார்.

விஸ்வாமித்திரருக்கு ஒன்றுமே புரியவில்லை. இருந்தாலும் அதிலே உட்கார்ந்தார். அவ்வளவு தான். அப்படியே அந்த சிம்மாசனம் குப்புறக் கவிழ்ந்து விட்டது. விஸ்வாமித்திரர் மட்டும் என்ன? உட்கார்ந்து கொண்டா இருப்பார்? அவரும் குப்புற விழுந்துட்டார். முகத்திலே நல்ல அடி! தடவிக் கொண்டே எழுந்தார். நான் தான் பார்த்து உட்காருங்கள் என்று சொன்னேனே என்றார் விஷ்ணு.விஸ்வாமித்திரர் யோசித்தார். மறுபடியும் அந்த சிம்மாசனத்திலே உட்கார்ந்தார். மறுபடியும் அது கீழே தள்ளி விட்டது! முதல் தடவையாவது கொஞ்சம் லேசான அடி! இந்தத் தடவை கொஞ்சம் பலமாகவே அடி ! விஸ்வாமித்திரருக்கு கோபம் வர ஆரம்பித்தது. நாராயணா? இது என்ன வேடிக்கை ? இப்போது உன்னை சபிக்கப் போகின்றேன் பார்! என்றார்.

நான் தான் பார்த்து உட்காருங்கள் என்று சொன்னேன் என்றார் அவர். சரி.. இன்னும் ஒரு தடவை உட்கார்ந்து பார்ப்போம் என்று கொண்டே சென்றார். முந்தின தடவையை விட இன்னும் வேகமாக குப்பறப் போட்டது. சிம்மாசனம்! எத்தனை தடவை முகத்தில் அடி வாங்குவார்? கோபம் வந்து விட்டது! விஸ்வாமித்திரருக்கு கோபம் வந்தால் சும்மா இருக்குமா? உடனே சாபம் கொடுக்க ஆரம்பித்தார். உன்னை சபித்து விட்டு தான் மறுவேலை என்று கையைத் தூக்கினார். நீ பூலோகத்திலே போய் பிறக்க வேண்டும் என்று சாபம் கொடுத்தார். விஷ்ணு இப்படி ஒரு சாபத்துக்காகத்தான் காத்துக்கொண்டு இருந்தார்.

உங்களுடைய சாபத்துக்கு ரொம்ப நன்றி ! நான் பூலோகத்தில் பிறப்பதற்கு ஒரு விஜயம் வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தேன்! நான் தான் பார்த்து உட்காருங்கள் பார்த்து உட்காருங்கள் என்று படித்துப் படித்து சென்னேன்...நீங்கள் தானே பார்க்கவில்லை! அதோ அங்கே பாருங்கள் என்று சுட்டிக் காட்டினார்.

விஷ்ணு காட்டிய திசையில் விஸ்வாமித்திரர் பார்த்தார். அங்கே பார்த்தால்... ஒரு அழகான சிம்மாசனம் அதிலே அரிச்சந்திர மகாராஜா உட்காந்திருந்தார். சத்தியத்திற்கு முன்னால் அசத்தியம் உட்கார முடியுமா? அரசு-மனைவி-மகன் எல்லாத்தையும் இழந்தால் கூட ஒரு பொய்கூட சொல்ல மாட்டேன் என்றாரே... அது தான் அவர் இன்று வைகுண்டத்திலே இருக்கின்றார்! என்றார் விஷ்ணு! உடனே விஸ்வாமித்திரர் நான் செய்த தவறுக்கு என்ன பிராயச்சித்தம்? என்றார்.

நீங்கள் தான் அரிச்சந்திரனையும் அவருடைய மனைவியையும் பிரித்து வைத்தீர்கள். அந்த பாவம் நீங்குவதற்கு ஒரு வழி சொல்கின்றேன். நான் உங்கள் சாபத்தின் படி ராமனாக பிறக்கின்றேன். என்னையும் இலட்சுமியையும் சேர்த்து வையுங்கள். பிரித்து வைத்த பாவம் சேர்த்து வைத்தால் சரி ஆகிடும் என்றார். அதனாலே தான் விஸ்வாமித்திரர் ராமனை அழைத்துக்கொண்டு போய் சீதையோடு திருமணம் செய்து வைத்தார். இது பெரியவர் ஒருத்தர் சொன்ன விபரம். இதில் இருந்து நாங்கள் ஒரு விபரத்தை புரிந்து கொள்ள வேண்டும். விஸ்வாமித்திரருக்கு விஷ்ணு உண்டாக்கின மாதிரி சில பேருக்கு கோபத்தை உண்டாக்கினாலே நாம் எதிர்பார்க்கின்ற பலனை அடைய முடியும். அதிலே அனுபவம் உள்ள ஒருவர் ஒரு விபரம் சொன்னார். தீபாவளி நாளிலே மனைவியை அழைத்துக்கொண்டு புடவையைப் புரட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தார்களாம்.அந்த அம்மா எல்லாம் 1000இற்கும் மேலே! இவர் பக்கத்துலே நின்று கொண்டே, பாத்து வாங்கு பாத்து வாங்கு என்று திருப்பித் திருப்பி சொல்லிக்கொண்டு இருந் தாராம். அந்த அம்மாவுக்கு கோபம் வந்து விட்டது. என்ன இது! பாத்து வாங்கு பாத்து வாங்கு என்றுகொண்டு... என்று பல்லைக் கடித்திருந்தார்! இவ்வளவு பொறுமை இவருக்கில்லை. அதே நிறத்திலே உன்னுடைய அம்மாவிடமும் இருக்குது. அதை யோசித்துப்பார்த்து வாங்கு என்று சொன்னேன் என்றார். உடனே அவர்களுக்கு கோபம் எல்லைமீறிப் போய் விட்டது. அப்படி என்றால் புடவையே வேண்டாம் வாங்க! என்று கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். விஸ்வாமித்திரர் கோபத்தினாலே விஷ்ணு உலகத்திற்கு வந்து சேர்ந்தார். மனைவியின் கோபத்தினாலே நம்ம ஆள் சௌகரியமாக வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓகஸ்ட் மாத இராசி பலன்கள்-2024



## மேஷம்

அசுவினி, பரணி கிருத்திகை 1-ம் பாதம்

### தலைமை தாங்கும் பண்பை இயற்கையிலேயே பெற்ற மேஷ இராசியினரே

கிரகநிலை - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் செவ்வாய், குரு - தைரிய வீரிய ஸ்தானத்தில் சந்திரன் - சுக ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் கேது - லாப ஸ்தானத்தில் சனி (வ) - அயன சயன போக ஸ்தானத் தில் ராகு என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 01-08-2024 அன்று சுக்கிரன் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16-08-2024 அன்று சூரியன் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-08-2024 அன்று சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-08-2024 அன்று செவ்வாய் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 31-08-2024 அன்று புதன் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் தைரியம் அதிகரிக்கும். பணவரவு இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். முன் கோபம் ஏற்பட்டு அதனால் வீண் தகராறு ஏற்படலாம். நிதானமாக செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற சூழ்நிலைகள் ஏதுவாக இருக்கும். செலவை குறைப்பதன் மூலம் பணத் தட்டுப்பாடு குறையலாம். பேச்சில் கடுமையை காட்டாமல் இருப்பது நன்மை தரும்.


உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணி புரியும் இடங்களில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. குறிப்பாக இயந்திரங்களை இயக்கும் போது கவனம் தேவை. மேலிடத்தின் மூலமாக நடக்க வேண்டிய காரியங்களில் தாமதம் ஏற்படலாம். குடும்பத்தில் குதூகலமான சுப பலன்கள் ஏற்படும். கணவன், மனை விக்கிடையே பந்தபாசம் அதிகரிக்கும். குழந்தைகளின் மூலம் மனம் மகிழும் படியான சூழ்நிலை உருவாகும்.

நண்பர்கள் உறவினர்களுடன் கவனமாக பேசி பழகுவது நல்லது. பெண்களுக்கு மனதில் வீண் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். முன்கோபத்தை குறைப்பது நன்மையைத் தரும். கலைத்துறையினருக்கு கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உங்களது வேலையை கண்டு மற்றவர்கள் பொறாமைப்படுவார்கள். கடன் பிரச்சினை தீரும். செல்வ நிலை உயரும்.

அரசியல்துறையினருக்கு இருந்த இறுக்கமான நிலை மாறும். மேலிடத் திற்கும் உங்களுக்கும் கருத்து வேற்றுமை உண்டாகலாம் கவனம் தேவை. பண விடயத்தில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. மாணவர்கள் மற்றவர்களுடன் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. கல்வி பற்றிய மனக் கவலை ஏற்பட்டு விலகும்.

**அஸ்வினி:** இந்த மாதம் தொழில் வியாபாரம் தொடர்பான பயணங்கள் மேற்கொள்ள வேண்டி இருக்கும். இனிமையான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலக பணி தொடர்பான அலைச்சல் இருக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

**பரணி:** இந்த மாதம் குடும்பத்தில் உங்களது பேச்சுக்கு எதிர்பேச்சு பேசியவர்கள் அடங்கி விடுவார்கள். கணவன், மனைவிக் கிடையில் மகிழ்ச்சி நீடிக்கும். பிள்ளைகள் தொடர்பான காரியங்களை செய்து முடிக்க அலைய வேண்டி இருக்கும். உங்களது செயல்களுக்கு இருந்த முட்டுகட்டைகள் விலகும். எதிர்பார்த்த



உதவிகள் கிடைக்கும். பணவரவு கூடும்

**கார்த்திகை - 1 ஆம் பாதம்:** இந்த மாதம் மாணவர்களுக்கு கல்வியில் திறமை வெளிப்படும். கல்வியில் வெற்றிபெற தேவையான உதவிகள் கிடைக்கும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடுவது நல்லது. காரிய தடை, தாமதம், வீண் அலைச்சல் உண்டாகும். மனக்கவலை ஏற்பட்டு நீங்கும். எதிர்பாராத செலவு ஏற்படும்.

**பரிகாரம்:** முருகனை வணங்க குடும்பத்தில் இருக்கும் பிரச்சினை தீரும். காரியவெற்றி உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** செவ்வாய், புதன், வெள்ளி ;

**சந்திராஷ்டம தினங்கள்:** 13, 14

**அதிர்ஷ்ட தினங்கள்:** 6.



## ரிஷபம்

கிருத்திகை 2,3,4-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்,

### வெள்ளை மனதுடன் அனைவரிடமும் பழகும் ரிஷப ராசியினரே

கிரகநிலை- ராசியில் செவ்வாய், குரு - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சந்திரன் - தைரிய வீரிய ஸ்தா னத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன் - பஞ்சம ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத்தில் சனி (வ) - லாப ஸ்தானத்தில் ராகு என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 01-08-2024 அன்று சுக்கிரன் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16-08-2024 அன்று சூரியன் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

26-08-2024 அன்று சுக்கிரன் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26-08-2024 அன்று செவ்வாய் ராசியில் இருந்து தனவாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 31-08-2024 அன்று புதன் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் ராசி நாதன் பல நல்ல பலன்களைப் பெற முடியும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேரலாம். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேரிடும். சாதூரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். சுகாதிபதி சூரியன் சஞ்சாரம் ஆறாமிடத்தைப் பார்ப் பதால் திடீர் உடல்நலக்கோளாறு ஏற்படும்.


தொழில் வியாபாரத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். பணவரத்து திருப்தி தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். அதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகம் தொடர்பான இடமாற்றம் ஏற்படலாம். குடும்பத்தில் இருப்பவர்கள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது.

கணவன், மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. குழந்தைகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். பெண்களுக்கு சாதூரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் தேடி வரலாம். கலைத்துறையினருக்கு நண்பர்கள், உறவினர்களிடம் பக்குவமாக பேசுவது நன்மை தரும். எந்த காரியத்திலும் சாதகமான பலன் பெற வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

பயணங்களின் போது கவனம் தேவை. அரசியல்துறையினருக்கு வெற்றி பெற கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். உங்களது நடவடிக்கைகள் மேலிடத்திற்கு திருப்தியை தரும். உடல் ஆரோக்கியம் பெறும். கடன் பிரச்சினை தீரும். மாணவர்களுக்கு மற்றவர்கள் திருப்தியடையச் செய்யும் வகையில் உங்களது செயல்கள் இருக்கும். கல்வியில் ஆர்வம் உண்டாகும்.

**கார்த்திகை 2, 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் மற்றவர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்ப்பதால் பகை ஏற்படாமல் இருக்கும். எவ்வளவு திறமையாகச் செயற்பட்டாலும் பாராட்டு கிடைப்பது அரிது. சிலரது எதிர்பாராத பேச்சு மனவருத்தத்தை தரலாம். கவனம் தேவை.

**ரோகினி:** இந்த மாதம் தொழில் வியாபாரம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கும் போது தீர ஆலோசித்தபின் முடிவு எடுப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள், சக ஊழியர்களின் கருத்துக்கு மாற்று கருத்து சொல்லாமல் இருப்பது நன்மை தரும்.



**மிருகசீரிடம் 1, 2 பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களுடன் கருத்து மோதல் உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த பூசல்கள் சரியாகும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்குவது மற்றும் அவர்களது நலனுக்காக பாடுபட வேண்டியும் இருக்கும்.

பரிகாரம்: வெள்ளி அன்று ஆதி பராசக்தியை வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். மனநிம்மதி கிடைக்கும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:** திங்கள்; வெள்ளி. **சந்திராஷ்டம தினங்கள்:** 15, 16, 17

**அதிர்ஷ்ட தினங்கள்:** 8, 9, 10

(தொடரும்...)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர்

548





முத்தும் மணியும், வைரமும், வாசனைத் திரவியங்களும் கப்பல்களில் வந்து இறங்கியதோடு அரபு நாட்டுக் குதிரைகளும் விற்பனைக்காக வந்து இறங்கின.

ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனாரின் காலத்தில் நாகைப் பட்டினம் சிறந்த மணிமாட நகரமாயிருந்தது. அந்த நகரத்தைக் கண்ட நம்பி ஆரூரர்,

காண்பினிய மணிமாடம் நிறைந்த நெடு வீதிக் கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே!"

என்று வர்ணித்தார். கடல் நாகைக் காரோணத்தில் மேவியிருந்த காயாரோகணப் பெருமானிடம் ஸ்ரீ சுந்தர மூர்த்தி நாயனார் என்னென்ன பொருள்கள் வேண்டுமென்று கேட்டார் தெரியுமா?, மற்ற ஊர்களிலே போலப் பொன்னும், மணியும் ஆடை ஆபரணங்களும் கேட்டதோடு, நாகைப் பட்டினத்திலே ஓர் உயர்ந்த சாதிக் குதிரையும் கேட்டுப் பெற்றுக் கொண்டார்.

"நம்பிதாமும் அந்நாட் போய்நாகைக் காரோணம் பாடி

அம்பொன்மணிப்பூண் நவமணிகள் ஆடைசாந்தம் அடற்பரிமா"

ஆகியவை பெற்றுக் கொண்டு திருவாரூர் திரும்பிச் சென்றதாகப் பெரியபுராணம் கூறுகிறது.

நாகைப்பட்டினத் துறை முகத்தில் வந்து இறங்கிய அரபு நாட்டுக் குதிரைகளைப் பார்த்ததும் நாயனாருக்கும் குதிரை ஏறிச் சவாரி செய்ய வேண்டும் என்று தோன்றி விட்டது போலும்!

நாகைப்பட்டினத்தைப் பற்றிப் புராணம் வர்ணிப்பது ஒருபுறமிருக்க, சரித்திர பூர்வமான கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் அந்நகரைப் பற்றிச் சொல்லியிருக்கின்றன.

"பல கோவில்களும், சத்திரங்களும், நீர் நிலைகளும், சோலைகளும், மாட மாளிகைகளும் நிறைந்த வீதிகளையுடைய நாகைப்பட்டினம்" என்று ஆனைமங்கலச் செப்பேடுகள் அந்நகரை வர்ணிக்கின்றன.

அதே ஆனைமங்கலச் செப்பேடுகள், அந்நாளில் நாகைப் பட்டினத்தில் புகழ்பெற்று விளங்கிய சூடாமணி விஹாரம் என்னும் பௌத்த ஆலயத்தைப் பற்றியும், அதன் வரலாற்றையும் கூறுகின்றன.

மலாய் நாடு என்று இந்நாளில் நாம் குறிப்பிடும் தீபகற்பம் அக்காலத்தில் ஸ்ரீ விஜய நாடு என்னும் பெயரால் பிரசித்தி பெற்றிருந்தது. அந்த நாட்டில் ஒரு முக்கிய நகரம் கடாரம். அந்த மாநகரைத் தலைநகராக வைத்துக்கொண்டு நாலா திசையிலும் பரவியிருந்த மாபெரும் ஸ்ரீவிஜய சாம்ராஜ்யத்தை நெடுங்காலம் ஆண்டு வந்தவர்கள் சைலேந்திர வம்சத்தார். அந்த வம்சத்தில் மகரத்துவஜன் சூடாமணிவர்மன் என்னும் மன்னன் மிகவும் கீர்த்தி பெற்று விளங்கினான். அவ்வரசன் "இராஜ தந்திரங்களில் நிபுணன் ஞானத்தில் ஸ்ரீரகுருவான பிரகஸ்பதியை ஒத்தவன் அறிவாளிகளான தாமரை மலர்களுக்குச் சூரியன் போன்றவன் இரவலருக்குக் கற்பகத் தருவாய் விளங்கினான்" என்று ஆனை மங்கலச் செப்பேடுகள் வியந்து புகழ்ந்து கூறுகின்றன.

அத்தகைய பேரரசனின் மகன் மாறவிஜயோத்துங்கவர்மன் என்பவன் தன் தந்தையின் திருநாமம் நின்று நிலவும் படியாக "மேரு மலையை யொத்த சூடாமணி விஹாரத்தை நாகைப் பட்டினத்தில் கட்டினான்" என்று அச்செப்பேடுகள் கூறுகின்றன.

கடாரத்து அரசனாகிய மற விஜயோத்துங்கன் நாகைப் பட்டினத்துக்கு வந்து புத்த விஹாரத்தைக் கட்டுவானேன் என்று வாசகர்கள் கேட்கலாம். சோழ வள நாட்டுடன் நீடித்த வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்த அயல் நாடுகளில் ஒன்று ஸ்ரீவிஜய நாடு. அந்நாட்டுப் பிரஜைகள் பலர் நாகைப் பட்டினத்துக்கு வந்து நிரந்தரமாகவே குடியேறி இருந்தனர். வேறு பலர் அடிக்கடி வந்து திரும்பினர். கடாரத்து அரசனும், அவனுடைய குடிகளும் புத்த மதத்தைச் சார்ந்தவர்கள்.

அவர்கள் புத்தரை வழிபடுவதற்கு வசதியாயிருக்கட்டும் என்று தான் அம்மன்னன் நாகைப் பட்டினத்தில் சூடாமணி விஹாரத்தைக் கட்டினான். புத்த மதத்தின் தாயகம் பாரத தேசமாயிற்றே என்ற காரணமும் அவன் மனத்தில் இருந்திருக்கலாம்.

தமிழகத்து மன்னர்கள் எக்காலத்திலும் சமய சமரசத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். ஆகையால் அவர்கள் நாகைப்பட்டினத்தில் சூடாமணி விஹாரம் கட்டுவதற்கு அனுமதி கொடுத்தார்கள்.

(தொடரும்...)

---





# சிறுவர் அரங்கம்

## வல்லவர் யார்?

(நேற்றைய தொடர்ச்சி...)

என்று நினைத்த மாத்திரம் அவன் ஒரு மலையாக மாறிவிட்டான்.

அப்போது மற்றொரு சிற்பி அந்த மலை மேல் மெதுவாக ஏறி வந்தான். அவன் ஒரு இடத்தில் உள்ள மலையின் பாறைகளைத் தேர்ந்தெடுத்து தன் உளியையும் சுத்தியலையும் கொண்டு பாறையைப் பிளந்து சிலை வடிக்க ஆரம்பித்தான்.

மலை வடிவில் இருந்த சிற்பி "சக்தி வாய்ந்த மலையின் பாறைகளையே பிளக்கும் சிற்பிதான் மலையை விட வல்லவன்" என்று நினைத்தான்.

தேவதையின் வரம் பாக்கியிருக்கிறதே! அதனால் அப்படி நினைத்த மாத்திரத்தில் பழையபடி அவன் தன் சுய உருவை அடைந்து விட்டான்.

சுய உருவிற்கே திடீரென்று திரும்பி விட்ட அவனுக்கு இப்போது மூளைக்குள் ஏதோ பொறி தட்டியது போல் இருந்தது.

நிதானமாக அமர்ந்து, தன் அனுபவங்களை நினைத்துப் பார்த்தான்.

ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்துவமும் அதைச் சார்ந்து வல்லமைகளும் இருப்பதை அறிந்து கொண்டான். அனைவருக்கும் வல்லவனாக விளங்க வேண்டும் என்ற நினைப்பை கைவிட்டான்.

தன் வல்லமைகளைப் முடிந்த வரை பெருக்கிக் கொண்டு அவற்றின் மூலம் உலகிற்கு உப்பாக விளங்குவதே சிறந்தது என்று நினைக்க ஆரம்பித்தான்.

தேவதை அவன் முன் திரும்பவும் தோன்றி அவனுக்கு நிறையப் பரிசுகளை மிக மகிழ்ச்சியுடன் வழங்கியது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமரியாதை எனும் சிம்மாசனத்தில் நிலைத்திருக்க, ஆசைகள் எனும் இருளை திருப்தி எனும் ஒளியால் நிறைப்போம். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வெற்றி தெற்கை நாடி பிடித்துப் பாருங்கள்

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவைத் தொடர்ந்து சஜித் பிரேமதாஸ கட்டுப் பணத்தைச் செலுத்தி தன்னை ஜனாதிபதி வேட்பாளராக அறியப்படுத்தியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் (2019) ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சஜித் பிரேமதாஸ போட்டியிட்டாராயினும் அவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இழுத்தடிப்புச் செய்தது.

அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்பதில் உடன்பாடில்லை.

அதன் காரணமாக கட்டுப்பணம் செலுத்துவதற்கான முடிவுத் திகதி நெருங்கும் வரையில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ என்பதை அறிவிப்பதில் செய்யப்பட்ட காலதாமதம் சஜித் பிரேமதாஸவின் தோல்விக்கான காரணங்களில் ஒன்றாயிற்று.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகி ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியை சஜித் பிரேமதாஸ ஆரம்பிப்பதற்கும் இதுவே காரணம் எனலாம்.

அதே நேரம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ தோற்று கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றதன் காரணமாகவே நான் ஜனாதிபதியாக வந்தேன்.

எனவே சஜித் பிரேமதாஸ விடயத்தில் நான் செய்தது சரி என்பதாக ரணில் விக்கிரமசிங்க கூறலாம்.

எது எவ்வாறாயினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றிருந்தால், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதற்கான வாய்ப்பு அறவே இல்லாமல் போயிருக்கும்.

ஆக, சஜித் விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க நீதியாக நடந்து கொள்ளவில்லையாயினும் அஃது அவருக்கு அனுகூலமாயிற்று என்பது மட்டும் நிறுதிட்டமான உண்மை.

ஆம், கடந்த 'பொதுத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சியினரும் தேர்தலில் வெற்றி பெற்றனர்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அனைத்து இடங்களிலும் படுதோல்வியுற்றிருந்தது.

தவிர, ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி கூட, ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த ஒட்டுமொத்த வாக்குகளையும் கூட்டி அதற்காக வழங்கப்பட்ட நியமன எம்.பி பதவி என்பது இங்கு நினைவிற்கொள்ளத்தக்கது.

ஆக, அரசியலில் இருந்து ஓரங்கட்டப்பட்ட ரணில் விக்கிரமசிங்க ஒற்றை எம்.பியாகப் பாராளுமன்றம் சென்று ஜனாதிபதியாகப் பதவியேற்று தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற அளவுக்கு அவருக்கு இயற்கை கடும் உதவி செய்துள்ளதென்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

எதுவாயினும் ரணில், சஜித், அநுர ஆகிய ஜனாதிபதி வேட்பாளர்களில் வெற்றி யாருக்குரியது என்பதை தமிழ் மக்களாகிய நாம் நாடி பிடித்துப் பார்ப்பது மிகவும் கட்டாயமானது.

ஏனெனில் தென்பகுதியின் நிலைப்பாட்டிலிருந்தே தமிழ் மக்களாகிய எங்களின் தீர்மானம் எட்டப்பட வேண்டும்.

# மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் இலங்கையில் நெருக்கடிகளை ஏற்படுத்தலாம்

## ஜனாதிபதி ரணில் அச்சம்

*(கொழும்பு)*

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் காரணமாக இலங்கையில் நெருக்கடிகள் ஏற்படலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சம் வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் 3 விசேட குழுக்களை ஜனாதிபதி நியமித்துள்ளார். இதன்படி, தேசிய பாதுகாப்பு தொடர்பான விசேட குழுவொன்றும், பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு குழுக்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான உயர்மட்ட குழுவொன்றையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் அங்கத்துவத்துடன் இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் உலகில் ஏற்படும் நிலைமைகளினால் இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதாரத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்படும் பட்சத்தில் செய்யப்பட வேண்டிய முன் ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பது இவர்களின் கடமையாகும். (ம-7)

## ஹட்டனில் மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில்

### 4 பேர் வைத்தியசாலையில் அனுமதி

ஹட்டன் கல்வி வலையத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள பிரபல பாடசாலை மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் தாக்குதலுக்கு உள்ளாகிய நான்கு மாணவர்கள் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று 03 மணியளவில் இடம்பெற்றதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

எவ்வாறெனில் ஒரே பாடசாலையில் கல்வி பயின்று வரும் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் இந்த மோதல் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

பாடசாலை நேரம் நிறைவடைந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த நிலையில், ஹட்டன் பேருந்து நிலையத்தில் வைத்து ஒரு மாணவன் கத்தியால் மற்றொரு மாணவனைத் தாக்கியுள்ளார்.

இந்த மோதலில் நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு மாணவனுக்கு கைப்பகுதியில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-7)

## ஆட்டோ - கார் விபத்து இளைஞன் உயிரிழப்பு

ஹொரணை, பொருவதன்ட பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கார் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த கால்வாயில் மோதி பின்னர் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காரின் சாரதி உறங்கியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ஹொரணை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது முச்சக்கரவண்டியில் இருந்த இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் களுத்துறை, புலத்சிங்களப் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞரொருவரே உயிரிழந்துள்ளார். காயமடைந்தவர் அருணகம பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய நபரொருவர் என்பதுடன் இவர் உயிரிழந்த இளைஞரின் காதலியின் தந்தை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரணை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

மனித பாவனைக்குத் தகுதியற்ற

## 30 கன்டெய்னர் மீன் டின்கள் துறைமுகத்தில் சிக்கியுள்ளது

சீனாவில் இருந்து கொண்டு வரப்பட்ட மனித பாவனைக்குத் தகுதியற்ற 30 கன்டெய்னர் மீன் டின்கள் துறைமுகத்தில் சிக்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பல வருடங்களாக டீப் ஃப்ரீசர்களில் வைக்கப்பட்ட மீன்களில் இருந்து தயாரிக்கப்பட்ட ரின்னே சீனாவில் இருந்து இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

டின்மீன் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் கடந்த காலப்பகுதியில் பாரியளவிலான டின் மீன்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சந்தை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

தரக்குறைவான டின் மீன்களை இறக்குமதி செய்து மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் சில இறக்குமதியாளர்கள் வேறு கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

டின் மீன்களுக்கு இறக்குமதித் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும் இந்தக் கடத்தல் இடம்பெற்று வருவதாக புறக்கோட்டை சந்தை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ம-7)

## யாழ். மாவட்ட செயலகத்தில் மீளாய்வு கலந்துரையாடல்

*(யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழான வேலைத் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடலானது யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் நேற்று அரசாங்க அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் போது மாவட்டத்திற்கு இவ்வருடம் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் விரிவாக ஆராயப்பட்டதுடன் குறித்த திட்டங்களின் கடந்த காலச் செயற்பாடுகள் தொடர்பாக துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு தடைப்பட்டுள்ள திட்டங்களை முன்னகர்த்திச் செல்வதற்கான வழிவகைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நாளாந்தம் 1000 சட்டவிரோதக் கருக்கலைப்புகள்

**(கொழும்பு)**

**இலங்கையில் நாளாந்தம் சுமார் ஆயிரம் சட்ட விரோதக் கருக்கலைப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக விசேட மருத்துவர் சமல் சஞ்ஜீவ தெரிவித்துள்ளார்.**

அத்துடன் இனப் பெருக்க ஆரோக்கியம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பான தெளி வின் மையே சட்ட விரோதக் கருக் கலைப்பு அதிகரிப்புக்கு காரணமெனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.மேலும் இந்த விடயம் ஸ்ரீஜய வர்த்தனபுர பல்கலைக் கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் ஊடாகவே கண்ட றியப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (றி-6)

லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

# ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடலாயம் 04-08-2024 ஞாயிறு ஆடி அமாவாசை நம்முன்னோரது பிதிர்க் கடன் தீர்த்தக்கரையில் செய்து அன்னம் பாலிக்கும் அருள்மிகு மடலாயம் - மாகேசுவரப் பூசை

**"அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப் பூமிசை
என் அன்பு ஆலிக்கும் ஆறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே"**

***ஐந்தாம் திருமுறை***

பந்தமும் வீடும் ஆன பரம்பொருள் ஆன்மாக்களாகிய நமக்கு நிலவுலக இன்மை வாழ்வில் உடல் **நலத்துக்காகச் சோற்றை நல்குகிறான்.** அவனே அம்மையில் திருவடிப் பேறாகிய **முத்திப் பேற்றையும் அருள வல்லவன்**. அவனை வணங்குவதால் எம்மிடத்தே அன்பு நெறி நாளும் **வளர்ந்து** பெருகி வருகிறது.

மாதா, பிதா, குரு , தெய்வம் வரிசையில் தாய், தந்தையருக்கு தீர்த்தக்கரையிலே எள்ளும் தண்ணீரும் இறைத்து சிவாச்சாரியாருக்கு காய், கறி, அரிசி போசனம் கொடுத்து பிதிர் பூசை செய்து, பசுவிற்கு ஒரு பிடி அகத்திக் கீரையும் கொடுத்து, நம்முன்னோரை நினைத்து ஆசாரசீலராக இருந்து சிவ ஆலயத்தில் **மோட்ச அருட்சனை செய்து**, இப் பூவுலகில் இன்புறுவதற்குரிய திருக்காட்சியைக் கண்டு தரிசித் தவர்களுக்கு யாவும் கை வரப் பெறும்.

நம்முன்னோர்கள் **மடலாயம் சிறப்பாக நடாத்தியவர்கள், யுத்தகாலத்தில், விபத்தில் மறைந்தவர்கள் அனைவரின் ஆத்மாக்களுக்கும் பிதிர்க்கடன் செய்வோம்.**

திரு திண்ணபுரக் கூத்தன் திருவடிகளுக்கு நெய்விளக்கு ஏற்றி மோட்ச அர்ச்சனை செய்து **மாணிக்கவாசகர் மடலாயத்தில் மாகேசுவரப் பூசையில்** கலந்து பசி ஆறி தியானிப்போம்.

ஆலயங்களில் வேத காலத்தில் செல்வத்தின் அடையாளமாக பசுக்கள் சிவ அம்சமாகவும், மடலாயங்கள் மாகேசுவரப் பூசையும் **அக்கால மக்கள் பெரும் செல்வமாகக் கருதப்பட்டது.** இவ்வாறு ஞான சம்பந்தரது கோயில்ப் பதிகத்தில் 5 ஆவது திருமுறையில்

**"செல்வ நெடுமாடம் சென்று சே(ண்) ஓங்கிச்
செல்வமதி தோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே"**

இது உண்மைச் செல்வம் யாது என உணர்த்தப் பட்டுள்ளது. தாய், தந்தை இல்லாதவர்களாகிய நாம் எல்லோரும் ஆடி அமாவாசை 04.08.2024 அன்று நம்முன்னோர்கள் யாவருக்கும் பிதிர்க்கடன் செய்து எள்ளும் தண்ணீரும் ஊற்றி மாணிக்க வாசகர் மடலாயத்தில் மாகேசுவரப் பூசையில் கலந்த நம்முன்னோர்களது ஆத்ம சாந்திக்கு பிரார்த் திப்போம். அப்போது அம்மையின் அருளையே தனக்கு உடம்பாகப் பெறுகிற மிக உயரிய பேறு ஆன் மாவுக்கு வாய்கின்றது.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**



**க.கு.க சிவபாலன்** , செயலாளர்
**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,
மாணிக்கவாசகர் மடாலயம்.**

(சி-903)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3185

Search for people, places and things

**சாலினி**




**பாலா**




**மதுமிதா**




**தனுசியா**




**கிருஷாந்தன்**




**கீர்த்திகா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமர்...

தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு தமது ஆதரவை வழங்க உள்ளதாக அறிவித்துள்ளது.

அக்கட்சியின் அரசியல் உயர்பீடம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் கூடி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியது.

கலந்துரையாடலின் பின்னரே ஜனாதிபதிக்கான தமது ஆதரவை மாஜன எக்சத் பெரமுன அறிவித்துள்ளது. (ம-7)

## வடமராட்சி...

பருத்தித்துறை புற்றளைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் சிக்கி ஒரு மாத காலமாகச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தலையில் ஏற்பட்ட கண்டல்கட்டி காரணமாக சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (ம-7,33,60)

## தமிழ்ப் பொது...

அநேகமான தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. வேட்பாளராக நிறுத்த சிலரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவர்களில் யாரைத் தெரிவு செய்வது என்பது தொடர்பில், அதுக்கென நியமிக்கப்பட்ட குழு ஆராய்ந்து வருகிறது.

அடுத்த வாரமளவில் ஒருவரை தெரிவு செய்து அவரின் பெயரை அறிவிப்போம் எனத் தெரிவித்தார். (ம-7)

## 20 இந்திய...

இந்திய உயர்ஸ்தானிகரகம் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதரகம் ஆகியன இணைந்து இலங்கை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் அவர்களை விடுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த 20 இந்திய மீனவர்களையும் இன்று இந்தியாவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மயங்கி...

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை மாலை உயிரிழந்துள்ளார்.

இதில் கடற்கரை வீதி, ஈச்சமோட்டையைச்சேர்ந்த, காசிப்பிள்ளை ஹியூமர் (வயது-75) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 27ஆம் திகதி பிறந்த தின நிகழ்வு ஒன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு கடற்கரை வீதி ஊடாக சென்று கொண்டு இருந்த போது அவர் மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக் கிழமை மாலை உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## நெடுந்தீவில்...

இந்திய உயர்ஸ்தானிகர் இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பவுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம், மீனவர்கள் தொடர்பான பிரச்சினை மனிதாபிமானத் தன்மையுடன் கையாளப்பட வேண்டும் என தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் மீள நிகழாமல் இருப்பதையும், அதிகாரத்தை பயன்படுத்தாமல் இருப்பதையும் உறுதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சு இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது. இதேவேளை, இலங்கை கடற்பரப்பில் உயிரிழந்த தமிழக மீனவர்களின் உறவினர்கள், இராமேஸ்வரம் பகுதியில் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் துறைமுகத்தை முற்றுகையிட்டு அவர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டுள்ளதாகத் தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## அரசியல் தீர்வு...

வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குத் தாம் தீர்மானித்திருக்கும் நிலையில், அதன் ஓரங்கமாக சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருடன் ஏற்கெனவே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டிய சுமந்திரன், எதிர்வருங்காலத்திலும் தமிழர்களுக்கான தீர்வு குறித்து வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதேவேளை இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி, தமிழ்மக்களின் கோரிக்கைகளை முன்வைப்பதன் ஊடாக அக்கோரிக்கைகள் பலமற்றதாகிவிடும் எனக் கரிசனை வெளியிட்ட அவர், இம்முறைபோன்று அடுத்தடுத்த ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ்மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவாரா? எனவும் கேள்வி எழுப்பினார்.

"2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப்போன்று இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்குகள் மிகமுக்கிய மானவையாகும். அதன்விளைவாக தற்போது நாம் பேரம்பேசக்கூடிய வலுநிலையில் இருக்கின்றோம்.

அவ்வாறிருக்கையில் அந்த ஆற்றலைப் புறந்தள்ளி, பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது பொறுப்பற்ற செயலாகும்" என்று தெரிவித்த சுமந்திரன், அது மாத்திரமன்றி இத்தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தோல்வியடைந்ததன் பின்னர், ஆட்சிபீட மேறும் பெரும்பான்மையின ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் தமிழர்களுக்கான தீர்வு குறித்த பேச்சுவார்த்தைகளை நடத்த முடியாத நிலையும் ஏற்படும் என விசனம் வெளியிட்டார்.

மேலும் அவரும், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் இணைந்து விடுத்த அழைப்புக்கு அமைய சில ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட முக்கிய கேள்விகளுக்கு பொது மேடை ஒன்றில் பதிலளிப்பதற்கு இணங்கியிருப்பதாகவும், அவர்களுடனும், ஏனைய வேட்பாளர்களுடனும் கலந்துரையாடியதன்பின்னரே இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்படும் எனவும் சுமந்திரன் தெரிவித்தார். (ம-7)

## கட்சி...

வேன் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும் மேற்குறித்த கருத்தானது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர் ஒருவர் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் ஆதரவு இருக்கின்றதா? எனக் கேள்வியை எழுப்பினார்.

அதற்கு கட்சியே தீர்மானிக்க வேண்டும். நான் இல்லை. தீர்மானத்தை மாற்ற வேண்டும் என கட்சி கூறினால், அதனையும் செய்வேன் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 5552
J 5 0 0 7 6 4
அத சம்பத
J 0 7 6 4
சீட்டிழுப்பு இலக்கம் 127
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.08.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1582
E 15 47 56 72 E
Double Chance 73244

மெகா பவர்
திகதி 01/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1900
Q 16 05 14 30 48
94110

லக்கி 7 VIP
திகதி 2024.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 0378
U 3 0 9 7 7 6 U

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3794
சீட்டிழுப்பு திகதி 01.08.2024
V 01 05 19 71
V 98792
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.01
சீட்டிழுப்பு இலக்கம் 0861
மேஷம் 02 05 22 41 மேஷம்
73983 09

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.08.2024 வெற்றி வாரம் 260 வர்ணம் மஞ்சள்
V 9 3 7 9 7 1
69811
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,764,588.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2526 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 01.08.2024 தினம் வியாழன்
05 11 14 72 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 102,149,756.80
DLB

சனிதா
திகதி 2024.08.01 வெற்றி வாரம் 4687 வர்ணம் சிவப்பு
17 20 38 54 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,059,160.40
41803
DLB

சீட்டிழுப்பு வாரம் 4238 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.01 தினம் வியாழக்கிழமை
14 19 24 26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,910,899.20
210998
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 16 29 31 63 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 536,506,545.80
1702
01.08.2024 வியாழன்
DLB

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2352
சீட்டிழுப்பு திகதி : 2024.08.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,241,776.00
ADA KOTIPATHI
01 08 20 25 V
317994
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு:

075 033 6759 (216)

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 17 37 684 (214)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0907)


## வியாழேந்திரனின் இரு செயலாளர்கள் பொலிஸாரால் கைது

(மட்டக்களப்பு)

வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் செயலாளர்கள் இருவர் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் நேற்று(01 ) கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆற்று மணல் அகழ்வுக்கான உரிமத்தினை பெற்றுக் கொள்வதற்காக இவ்வாறு அவர்களுக்கு இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.

(C-0907)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0907)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

STUDY IN UK

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

*IELTS Lifeskills A1 (UK Spouse Visa exam)
*Dutch(டச்) - Netherland/Holand - Classes
*IELTS Academic & General / IELTS UKVI
வகுப்புகள் நடைபெறுகின்றன. (1585)

WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
0779265447 / 0217200989
கிளைகள் –
சாவகச்சேரி/வவுனியா/புதுக்குடியிருப்பு


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் சேவையாற்றும்
திருமதி லோகாம்பிகை சிறிகாந்தன்
அவர்களது அன்புக் கணவர்

### திரு. மார்க்கண்டு சிறிகாந்தன்

பிரதி அதிபர் - யா/ உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

மலர்வு 20.09.1964
உதிர்வு 31.07.2024

அவர்கள் 31.07.2024 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்

(C-906)


## கார் வாடகைக்கு தேவை

Alto car/ Wagan R
மாதாந்த வாடகைக்கு
சாரதி இல்லாமல் தேவை.

075 09 06 486 (1603)

## வீட்டுப் பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வீட்டுச் சமையலுக்கு உதவி செய்தல், வீட்டு வேலைகள் மற்றும் ஆண் முதியவர் ஒருவரைப் பராமரிக்க பணியாளர் உடன் தேவை. தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும், சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

078 731 1049 (218)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு
ஆடைகளின் சாம்ராஜ்யம்

# இந்தியன் செலக்‌ஷனின்

ஆடி மாத ஆடைத் தள்ளுபடி

இம் மாதம் 02,03,04,05,06 ம் திகதி வரை மட்டுமே



- திருமணப் பட்டுச்சாறிகள்
- கொட்டன் சாறிகள் சல்வார்கள்
- சல்வார் துணிகள்
- புத்தம் புது டொப் வகைகள்
- மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான
- ஆடைத் தெரிவுகள்...

இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்

காலம் : ஆகஸ்ட் 02,03,04,05,06 ம் திகதி வரை மட்டுமே

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும் (217)

## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும். (C-904)

தொடர்புகளுக்கு: 076 315 6470

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 24 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உள்ளது.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் (2வது காணி)
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம் (550,000/=)
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1597)

தொடர்புகளுக்கு:- ஜெயம்

077 814 7389
077 986 5457


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.